தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சோளத்தின் விலையில் மாற்றம் இருக்காது

அமெரிக்க ஐக்கிய நாடுகள் வேளாண் துறையின் (USDA) மதிப்பீட்டின்படி (2015-16) இந்தியாவில் சோளம் 5.75 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.05 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. மகாராஷ்ரா, கர்நாடகா, மத்தியபிரதேசம், ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, தமிழ்நாடு, குஜராத், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில், சோளம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கரூர் மற்றம் திருப்பூர் ஆகியவை சோளம் விளைவிக்கும் முக்கிய மாவட்டங்களாகும். மஞ்சள் சோளம் உயர்தர தீவனப்பயிர் விளைச்சலுக்கும், வெள்ளைச் சோளம் தீவனம் மற்றும் உணவு தானியத்திற்காகவும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில், ஆடிப்பட்டம் (ஜுலை–செப்டம்பர்) மற்றும் புரட்டாசிப்பட்டம் (அக்டோபர் - டிசம்பர்) ஆகிய இரு பருவகாலங்களிலும் சோளம்பயிரிடப்படுகிறது.

சோளத்திற்கு மிகவும் சாத்தியமான தொழிற்சாலை பயன்கள் உள்ளன. இந்தியாவில், ஆடிப்பட்டத்தில் விளைவிக்கும் சோளம் கோழி மற்றும் கால்நடை தீவனத்திற்காகவும், வடிப்பகங்களிலும் 50 சதவிகிதம் உபயோகிக்கப்படுகிறது. அதேசமயம் புரட்டாசிப் பட்டத்தில் விளைவிக்கும் சோளம் உணவு தானியத்திற்காக உபயோகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், ஆண்டுக்கு 4.2 இலட்சம் எக்டர் பரப்பளவில் சோளம் விளைவிக்கப்பட்டு6.3 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்சமயம் வருடத்திற்கு தோராயமாக 2.0 மில்லியன் டன்கள் சோளம் கோழி தீவனத்திற்கும், 0.60மில்லியன் டன்கள் கால்நடை தீவனத்திற்கும், 0.49 மில்லியன் டன்கள் வடிப்பகங்களின் தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் வேளாண்

துறை (USDA) மதிப்பீட்டின்படி இந்தியாவில் 2015-16 ஆம் ஆண்டில் சோளத்தின் இருப்பு நிலை மற்றும் உள்நாட்டுநுகர்வு 0.29 மில்லியன் டன்கள் மற்றும் 5.3 மில்லியன் டன்களாக உள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கிவரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சோளத்தின் விலையை, சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின் போது (செப்டம்பர்2016-ல்) தரமான சோளத்தின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.22-24 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறுதானியப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி:- 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்